# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 2/2016** **நாள் : 13/01/2016**

**பெறுநர்**
மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள்
மத்திய அமைப்பின் அனைத்து கிளைச் செயலாளர்கள்
மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினர்கள்

---

அன்பான தோழரே,

வணக்கம்,

**அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் தின வாழ்த்துக்கள்.**

2015- டிசம்பர் 27,28 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் மின்வாரிய ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் சம்மந்தமாக இரு இயக்கங்களுக்கு திட்டமிட்டோம்.

1. 28.01.2016 அன்று மாலை நேர தர்ணா

மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2015 முதல் ஊதிய உயர்வு அளித்திருக்க வேண்டும். அதற்கான பேச்சு வார்த்தையை துவங்கிட, பேச்சுவார்த்தைக்குழு அமைக்க வேண்டியும், களப்பணி ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள குறைபாடுகளை அகற்றிடும் வகையில் வழிகாட்டுதலை வழங்கிட வேண்டியும், களப்பணி ஊழியர்களின் பதவி உயர்வில் இருவழிப்பாதை இருபுஜப்பாதை என்பவைகளின் மீது நடைபெற்ற பேச்சுவார்த்தையை முடித்து, களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வை முறைப்படுத்திட வேண்டியும், இவைகளுக்கிடையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக கம்பியாளர்களாக பணியாற்றி பதவி உயர்வின்றி இருப்பவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் வகையில் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவிகளை அனுமதித்து பதவி உயர்வு வழங்கிட வேண்டியும், வாரியத்தின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் எதிர்வரும் 28.01.2016 அன்று மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்னர் மாலை நேர தர்ணா நடத்துவதென்ற முடிவை நிறைவேற்றிட தயாரிப்புகள் செய்து இருப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மாநில செயற்குழு முடிவுகளை செயல்படுத்தும் விதமாக மண்டலக் குழுக்கூட்டம், கிளையின் நிர்வாகக்குழுக்கூட்டம், நடத்தப்பட்டு திட்டமிடப்பட்டு இருக்க வேண்டும். அப்படி நடத்தாத கிளைகள், மண்டலங்கள் உடனடியாக அவைகளை நடத்தி திட்டமிட வேண்டுகிறோம்.

28.01.2016 , மற்றும் 17.02.2016 ஆகிய இரு இயக்கங்களிலும் கலந்து கொள்ளக்கூடிய மாநில நிர்வாகிகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

28.01.2016 அன்று மாலை நேர தர்ணாவிற்கு பிரச்சாரம் செய்யும் வகையில் தர்ணாவின் நோக்க கோரிக்கைகளை இத்தோடு இணைத்துள்ளோம். அந்த வாசகங்களையே துண்டறிக்கை, சுவரொட்டி, டிஜிட்டல் பேனர்களாக பயன்படுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## 2. 17.2.2016 மாலை நேர தர்ணா

மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு வாரியம் அறிவித்துள்ள ரூ.250/-ஐ, தினக்கூலியாக வழங்கச்செய்து அதன் பின்னர் பணி நிரந்தரம் செய்வதென்றும், மின்வாரியத்தில் புதியதாக துவங்கப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை அனுமதித்து நிரப்பிட ஏற்படும் காலதாமதத்தை கண்டித்தும் எதிர்வரும் 17.02.2016 அன்று அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்னர் மாலை நேர தர்ணா நடத்துவதென்றும், சென்னையில் வட, தென் மண்டலங்கள் இணைந்து மின்வாரிய தலைமையகம் முன்பு பெருந்திரளான மாலை நேர தர்ணா நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய இரு இயக்கங்களையும் வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

## மத்திய அமைப்பின் உறுப்பினர் பதிவு

மத்திய அமைப்பின் 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் இலக்கை அடைய 7000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்த்திட வேண்டியுள்ளது. வந்த உறுப்பினர் எண்ணிக்கையை பரிசீலிக்கின்ற போது 2014 ஆம் ஆண்டு உறுப்பினர் ஆனவர்கள் சுமார் 6000-க்கும் மேல் புதுப்பிக்க வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் உறுப்பினர் புதுப்பித்தலை முழுமையாக செய்து முடித்தாலே 2015 ஆம் ஆண்டு உறுப்பினர் இலக்கை அடைந்திட முடியும். அந்த அடிப்படையில் 5.2.2016-க்குள் உறுப்பினர் எண்ணிக்கையை முடித்திட வேண்டுமென மாநில செயற்குழுவில் எடுத்த முடிவை நினைவு படுத்தி, அந்த அடிப்படையில் உறுப்பினர் புதுப்பித்தலையும்,சேர்த்தலையும் முடித்திட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

2016 ஆம் ஆண்டு நாட்குறிப்பு தயாராகி விட்டது. பொங்கல் பண்டிகைக்கு முன்பு அதை அனுப்புவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டு உறுப்பினர் பதிவுக்கான ரசீது புத்தகங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)
பொதுச் செயலாளர்

# கோரிக்கை முழக்கங்கள்

மின் வாரியத்தில் பணியாற்றும் 80000 ஊழியர்களுக்கும் அதே அளவிலான பணி ஓய்வு பெற்றவர்களுக்கான ஊதியம், ஓய்வூதியத்தையும் 1.12.2015 முதல் உயர்த்தி அளித்திருக்க வேண்டும். அதற்கான பேச்சு வார்த்தை என்பது துவங்கப்பட்டிருக்க வேண்டும். சென்ற தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் மின் வாரிய ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய ஊதிய உயர்வு கோரிக்கை மீது பேச்சு வார்த்தை நடத்திட, பேச்சு வார்த்தைக்குழு அமைக்க வேண்டும் என திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர்.கே.பாலபாரதி அவர்கள் கேள்வி எழுப்பிய போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தைக்கான குழு அமைக்கப்பட்டு, பேச்சு வார்த்தை நடத்தி அதன் இறுதி கட்டத்தில் அமைச்சர் அவர்களின் தலையீட்டோடு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்து மாதங்கள் பல கடந்துள்ள போதிலும், பேச்சு வார்த்தைக்கான குழு அமைக்காததை சுட்டிக்காட்டுவதோடு பேச்சு வார்த்தைக் குழுவை அமைத்து தொடர்ச்சியாக பேச்சு வார்த்தை நடத்தி ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும்.

மின் வாரியத்தில் பணியாற்றும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில், இரு வழிப்பாதை பதவி உயர்வு, அதற்கு மாற்றாக இரு புஜ பதவி உயர்வு என இரு ஆலோசனைகள் வாரியம் வழங்க, அதன் மீது தொழிற்சங்கங்களோடு இருமுறை பேச்சு வார்த்தை நடத்தி பெரும்பாலான தொழிற்சங்கங்கள் ஒரு மித்த கருத்தை தெரிவித்த பின்னரும், அதன் மீது முடிவு எடுப்பதில் வாரியம் வீணான காலதாமதத்தை கடைபிடிக்கும் போக்கை கைவிட்டு, உடனடியாக ஏற்கனவே நடத்திய பேச்சு வார்த்தை விவரங்களை வைத்து முடிவுக்கு வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு வழங்குவதில் முறைப்படுத்துவற்கான பேச்சு வார்த்தையும், அதன் மீது முடிவு எடுப்பதில் ஏற்படும் காலதாமதம், இவைகளுக்கிடையில் 12, முதல் 13 ஆண்டுகள் வரை கம்பியாளராகவே பணியாற்றி, பணி ஓய்வு பெறும் அவல நிலையை போக்கிடும் வகையில் 10 ஆண்டுகளுக்கு மேல் கம்பியாளர்களாக பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் சூப்பர் நியூமரி மின்பாதை ஆய்வாளர் பதவி களை அனுமதித்து பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

கம்பியாளரிலிருந்து மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு வழங்க பணிவிதிகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று வழி காட்டுவதற்கு பதிலாக, பணி விதிகள், கம்பியாளரின் முதன்மை பட்டியல் மாறாமல் இருக்கும் வகையில் பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்ற குழப்பமான வழி காட்டுதலினால் கம்பியாளர் முதன்மை பட்டியலில் இடம் பெற்றிருந்தும், பணி அனுபவம் இல்லாதவர்களுக்கு பணி அனுபவம் வரும் வரையில், மின்பாதை ஆய்வாளர் பதவிகளை நிரப்ப முடியாத அவலநிலை உருவாகிஉள்ளதை கைவிட்டு, முதன்மை பட்டியல் அடிப்படையில் தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட பணி விதிகளில் சொல்லப்பட்ட பணி அனுபவம் உள்ளவர்களுக்கு பதவி

கள உதவியாளர் முதன்மை பட்டியல் தயாரிக்கும் போது மஸ்தூரில் இருந்து பதவி உயர்வு பெற்று அடிப்படை சம்பளம் பெறும் கள உதவியாளர்கள் முதன்மை பட்டியலில் முன் பாகவும், தொகுப்பூதியம் பெறும் கள உதவியாளர்கள், (பயிற்சி) முதன்மை பட்டியலில் இளையவராகவும் இடம் பெறுவதற்கு மாறாக தொகுப்பூதியம் பெறும் கள உதவியாளர் (ப யிற்சி)களை முதன்மை பட்டியலில் முதன்மையாகவும் வைக்கும் போக்கை கைவிட வேண்டும்.

**17.2.2016 மாலை நேர தர்ணா**

1. தமிழக மின் வாரியத்தில் 20,000க்கும் மேற்பட்ட கள உதவியாளர் பதவிகள் காலி பணி இடங்களாக உள்ளது. அவர்கள் செய்ய வேண்டிய பணியை மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள், அவுட்சோர்சிங் ஊழியர்கள் மூலம் பணியை செய்ய வைத்து உழைப்புச் சுரண்டலை அரங்கேற்றி வருகிறது. இதனை மாற்றும் வகையில் மின் வாரியத்தில் பணியாற்றும் 10,000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு மின்வாரியம் நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச கூலியை அமலாக்கிடவேண்டும். பின்னர் மின் வாரிய கள உதவியாளர் காலிப் பணி இடங்களில் அவர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

2. மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பணி நிரந்தரப் படுத்திய பின்னர் 1000க்கும் மேற்பட்ட புதிய பிரிவு அலுவலகங்கள் துவங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அப்புதிய அலுவலகங்களில் பிரிவு அலுவலர்களே முன் முயற்சி அடுத்து பகுதி நேர ஊழியர்களை பணிக்கு அமர்த்தி, குறைந்த பட்ச கூலியை அளித்து வருகின்றனர். சில பிரிவு அலுவலகங்களில் துப்புறவு பணியாளர்களே இல்லாத நிலையில் துப்புறவு பணிகளே நடைபெறாத நிலை தொடர்கிறது. இதை மாற்றிடும் வகையில் புதியதாக துவங்கப்பட்ட அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்களை அனுமதித்து ஏற்கனவே குறைந்த கூலியில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு வாரியத்தால் அனுமதிக்கப் பட்ட ஊதியத்தை வழங்கி முறைப் படுத்துவது, பகுதி நேர ஊழியர்கள் நியமிக்கப்படாத புதிய அலுவலகங்களில்,புதிய பகுதி நேர ஊழியர்களை நியமிப்பது போன்றவைகளை வாரியம் உடனடியாக செய்திட வேண்டும்.

---

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

**.......................................... கிளை**

**இணைப்பு: சி.ஐ.டி.யூ/ஈஈஎப்ஐ**

## 28.01.2016 , மற்றும் 17.02.2016 ஆகிய இரு இயக்கங்களிலும் கலந்து கொள்ளக்கூடிய மாநில நிர்வாகிகளின் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | வடசென்னை | எஸ்.எஸ். சுப்பிரமணியன் |
| 2. | மத்திய சென்னை | கே. விஜயன் |
| 3. | மேற்கு சென்னை | ஏ. பழனி |
| 4. | தென்சென்னை | |
| 5. | செங்கல்பட்டு | |
| 6. | காஞ்சிபுரம் | |
| 7. | வேலூர் | கோ. மோகன்ராஜ் |
| 8. | திருப்பத்தூர் | எஸ். ஆனந்தன் |
| 9. | தர்மபுரி | வி.இளங்கோ |
| 10. | விழுப்புரம் | எம். வெங்கடேசன் |
| 11. | கடலூர் | கே. அம்பிகாபதி |
| 12. | திருவண்ணாமலை | தி. ஜெய்சங்கர் |
| 13. | கள்ளக்குறிச்சி | டி. பழநிவேலு |
| 14. | பெரம்பலூர் | ஜி. ராமகிருஷ்ணன் |
| 15. | திருச்சி/மாநகர் | கே. ரவிச்சந்திரன் |
| 16. | கரூர் | டி கோவிந்தராஜு |
| 17. | புதுக்கோட்டை | எம். பன்னீர்செல்வம் |
| 18. | தஞ்சாவூர் | பி.கே. சிவக்குமார் |
| 19. | நாகப்பட்டிணம் | எம். தனலட்சுமி |
| 20. | மதுரை | எஸ். ராஜேந்திரன் |
| 21. | மதுரை மாநகர் | எஸ். ராஜேந்திரன் |
| 22. | தேனி | வீரண்ணன் |
| 23. | ராமநாதபுரம் | ஆர். ரவிக்குமார் |
| 24. | சிவகங்கை | ஈ. அந்தோணி |
| 25. | திண்டுக்கல் | கே. அருட்செல்வன் |
| 26. | விருதுநகர் | பீர்முகமதுஷா |
| 27. | திருநெல்வேலி | ஆர். குருவேல் |
| 28. | தூத்துக்குடி | எச். ஜான்சௌந்தரராஜ் |
| 29. | கன்னியாகுமரி | வி. பாலசுப்பிரமணியன் |
| 30. | நீலகிரி | வி. மதுசூதனன் |

| | | |
|---|---|---|
| 31. | கோவைதெற்கு | ஆர். சிவராஜ் |
| 32. | கோவைவடக்கு | ஆர். சிவராஜ் |
| 33. | கோவை மாநகர் | ஆர். சிவராஜ் |
| 34. | திருப்பூர் | எம். ஜோதிமணி |
| 35. | உடுமலைபேட்டை | எஸ். வண்ணமுத்து |
| 36. | சேலம் | டி. கோபாலகிருஷ்ணன் |
| 37. | மேட்டூர் | ஆர். ஸ்ரீதர் |
| 38. | ஈரோடு | ஆர். கருமலையான் |
| 39. | கோபி | ஆர். கருமலையான் |
| 40. | நாமக்கல் | டி. ஸ்ரீதர் |
| 41. | வடசென்னை அனல் | எஸ்.எஸ். சுப்பிரமணியன் |
| 42. | எண்ணூர் | கே. விஜயன்/ஏ. பழனி |
| 43. | மேட்டூர் அனல் | எம். ஜோதிமணி |
| 44. | தூத்துக்குடி அனல் | எச். ஜான்சௌந்தரராஜ் |
| 45. | ஈரோடுஉற்பத்தி | |
| 46. | காடம்பாறை | |
| 47. | குந்தா உற்பத்தி | |
| 48. | நெல்லைஉற்பத்தி | எம். ஜோதிமணி |
| 49. | காற்றாலைபண்ணை | ஆர். குருவேல் |
| 50. | பொதுகட்டுமானம்/சென்னை | எஸ்.எஸ்.எஸ்/கே.வி./ஏ. பழனி |
| 51. | பொதுகட்டுமானம்/மதுரை | எஸ். ராஜேந்திரன் |
| 52. | பொதுகட்டுமானம்/சேலம் | |
| 53. | பொதுகட்டுமானம்/திருச்சி | |
| 54. | திருவாரூர் | டி. அறிவழகன் |
| 55. | கிருஷ்ணகிரி | ஆர். சிவராஜ் |